# வெள்ளகால் சாகிப் வெ.ப. சுப்பிரமணிய முதலியார் அவர்களின் சரித்திரம்

எங்கள் தந்தையார் திருநெல்வேலி ஜில்லாவில் வெள்ளகால் கிராமத்திலிருந்த பழனியப்ப முதலியாருக்கும் உலகம்மாளம்மைக்கும் சீமந்தப்புத்திரனாக ஆழ்வார்குறிச்சியிலுள்ள அவர்கள் பாட்டனார் வீட்டில் 1857ம் ஆண்டு ஆகஸ்டு மீ 14 தீ பிறந்தார்கள். 1946ம் ஆண்டு தனது 90வயதில் 12.10.1946ல் மறைந்தார்கள். அவர்களுக்கு 6 வயதிற்குப்பின் திருமலையப்ப முதலியார் என்ற தம்பியும் அவர்களுக்கு 9 வயதிற்குப்பின் ராமலிங்கமுதலியாரும் பிறந்தார்கள். எங்கள் பாட்டியார் உலகம்மாள் அம்மை ஆழ்வார்குறிச்சி துறை ராமலிங்க முதலியார் அவர்களின் கடைசித் தங்கையை எங்கள் பாட்டனாருக்கு சண்முக நாத முதலியார் என்ற தம்பியும் அலமேலு அம்மை என்ற ஒரு தங்கையும் இருந்தார்கள்.

எங்கள் பாட்டனாரின் தகப்பனார் சுப்பிரமணிய முதலியார் மதுரை ஜில்லாவிலுள்ள சோழவந்தானிலிருந்து வெள்ளகாலில் வந்து குடியேறினவர்கள். எங்கள் பாட்டனாரின் தம்பி சண்முகநாத முதலியாருக்கு ஸ்ரீவில்லிப்புத்தூர் பெரிய வீடு சிவக்கொழுந்து முதலியாரவர்களின் மூத்த புத்திரி அம்மணி அம்மையையும் தங்கை அலமேலு அம்மையை, திருநெல்வேலி மேட்டை தளவாய் திருமலையப்ப முதலியாரின் புத்திரர் மேட்டைத்தளவாய் குமாரசுவாமி முதலியாரவர்களுக்கும் மணமுடித்திருந்தார்கள்.

வெள்ளகால் கிராமம் சுற்றிலும் தோப்புகள் உள்ள குளிர்ச்சியான ஊர். இங்கு தென்னை மரங்கள் அதிகம் உண்டு. எங்கள் தகப்பனாரின் வீட்டுக்கு மேல்பக்கம் விநாயகர் கோவிலும், அதற்குப் பக்கம் காந்தாரி அம்மன் கோவிலும் கோவிலுக்கு மேற்கே 5வது வகுப்பு வரை உள்ள 1 பள்ளிக்கூடமும் வாய்க்காலும் உண்டு.

எங்கள் பாட்டனார் பழனியப்ப முதலியாரின் காலத்திலே திருநெல்வேலி தளவாய் எஸ்டேட் (கோர்ட் ஆப் வார்டுஸ்)ல் இருந்தது. அதற்கு அவர்களே மானேஜராக இருந்து எஸ்டேட்டைப் பலவகையிலும் விருத்திக்குக் கொண்டு வந்தார்கள். அவர்கள் தங்கை அலமேலு அம்மைக்கு செல்லம்மாள் அம்மை வள்ளியம்மை அம்மை என்ற இரண்டு பெண்களும் மேட்டைதளவாய் ரெங்கநாத முதலியார் மேட்டைதளவாய் திருமலையப்ப முதலியார் என்ற இரண்டு புத்திரர்களும் இருந்தார்கள். புத்திரர்கள் இருவருக்கும் சிறுவராயிருக்கும் பொழுதே தாயாரும், தகப்பனாரும் காலமாகிவிட்டார்கள். ஆகையால் எங்கள் பாட்டனார் தங்கையின் புத்திரர்கள் மேஜரருகும்வரை குடும்பக் காரியங்களை மேல் பார்த்து வந்தார்கள். அவர்களின் மூத்த புத்திரி செல்லம்மாள் அம்மையை கிடாரக்குளம் தையல் பாக முதலியாருக்கும் வள்ளியம்மை அம்மையை ஸ்ரீவில்லிப்புத்தூர் சண்முகசுந்தர முதலியாருக்கும், ரெங்கநாத முதலியாருக்கு ராஜபாளையம் முத்தம்மாள் அம்மையையும் திருமலையப்ப முதலியாருக்கு எங்கள் பாட்டனாரின் தம்பி புத்திரி உலகம்மாள் அம்மையையும் மண முடித்திருந்தார்கள்.

எங்கள் தந்தையார் 5 வயதுவரை வெள்ளகாலிலும் அதன் பின் படிப்பிற்காக திருநெல்வேலி அரண்மனையில் தன் அத்தை கணவர் குமாரசுவாமி முதலியாரவர்கள் வீட்டிலும் இருந்து தெற்குப் புதுத் தெருவில் திண்ணைப்பள்ளிக்கூடம் வைத்திருந்த கணபதி வாத்தியார் அவர்களிடம் படித்தார்கள். அவரிடம் 4வருடங்கள் படித்தபின் அரசடிப்பாலத்தின் தெருவிலிருந்த மிடில் பள்ளிக்கூடத்தில் தமிழும், ஆங்கிலமும் சேர்ந்து படித்து முடிந்ததும் திருநெல்வேலி இந்து கலாசாலையில் சேர்ந்து படித்தார்கள். மாசி மந்திரி சர்.டி.எ.ன். சிவஞானம் பிள்ளையவர்கள் இவர்கள் பள்ளித் தோழர். 1876 டிசம்பரில் நடந்த மெட்ரிகுலேசன் பரீட்சையில் தேர்ந்த பின் சென்னை கிறிஸ்தவக் கல்லூரியிலே இண்டர்மீடியட் வகுப்பில் சேர்ந்து படித்தார்கள். பின்னால் இவர்கள் பம்பாய் கால்நடை கல்லூரியில் படித்து 3வரிசுகளைப் பெற்று தங்கப்பதக்கத்துடன் வந்தார்கள்.

என் தந்தையாரின் தாய் மாமனார் ஆழ்வார்குறிச்சி மேலப்பண்ணை ஆறை ராமலிங்க முதலியாரவர்களுக்கு சிவசைல முதலியார், மயிலப்ப முதலியார் அழகப்ப முதலியார் என்ற 3 புத்திரர்களும், அழகம்மாளண்ணி, தொப்பை அண்ணி, வேலம்மாளண்ணி, மரகதத்தண்ணி என்ற 4 புத்திரிகளும் இருந்தார்கள். அவர்களில் 3வது புத்திரி வேலம்மாள் அண்ணியை எங்கள் தந்தையாருக்கும், கடைசி புத்திரி மரகதத்தண்ணியை சங்கரன்கோவில் சொக்கலிங்கமுதலியாரவர்களுக்கும் மணம் பேசினார்கள். தந்தையார் சில காரணங்களால் தனக்கு கலியாணம் இப்போது வேண்டாமென்று சொல்லிவிட்டார்கள். அதற்குபின் எங்கள் சிறிய தகப்பனார் திருமலையப்ப முதலியாரவர்களுக்கு முகூர்த்தம் நிச்சயித்து கலியாண வேலைகள் நடந்தது. 1வது மகள் அழகம்மாளண்ணியை திருநெல்வேலி தளவாய் அழகப்ப முதலியாரவர்களுக்கும், 2வது மகள் தொப்பை அண்ணியை இடைகால் அருணாசல முதலியாரவர்களுக்கும் மணம் நடந்திருந்தது. அவர்களில் அழகம்மாளண்ணிக்கு இரண்டு புத்திரிகளும், தொப்பை அண்ணிக்கு நான்கு புத்திரர்களும், ஒரு புத்திரியும் பிறந்தார்கள். அழகம்மாளண்ணிக்கு 2வது பிரசவத்தில் தேக சுகமில்லாமல் இருந்து தகப்பனார் வீட்டுக்கு வந்திருந்தார்கள். கலியாணத்திற்கு 3 நாள்களுக்கு முன் அழகம்மாளண்ணி திடீரென்று மரணமடைந்து விட்டார்கள். அதன் பின் கொட்டகை மாற்றைப் பிரித்துவிட்டு பச்சை ஓலைப்பந்தல் போட்டு பெரிய தாயாரின் அந்திமக்கருமங்கள் நடந்தது. இது நிற்க கலியாணமாப்பிள்ளை சிறிய தகப்பனார் திருமலையப்ப முதலியாரவர்கட்கு

குளிர்சுரம் வந்து திருமங்கலியதாரண சமயத்திற்கு கூட தன்னால் உட்கார்ந்திருக்கமுடியாதென்று சொல்லிவிட்டார்கள். எங்கள் தகப்பனார் தம்பியின் கலியாணத்திற்கு வந்திருந்தார்கள். அவர்களிடம் தாயாரும் தகப்பனாரும் நிலைமையைச் சொல்லி நீ தான் கலியாணம் செய்து கொள்ளவேண்டுமென்று வற்புறுத்தினார்கள். அதற்கு அவர்கள் நான் தம்பியின் கலியாணத்திற்கு வந்துவிட்டு நான் கல்யாணம் செய்ய மாட்டேன் என்று சொன்னார்கள். அதன் பின் மாமனார் மருமகனை கூப்பிட்டு நீர் தாம் கட்டாயம் கலியாணம் செய்து கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். எங்கள் தகப்பனாருக்கு ஸ்ரீவில்லிபுத்தூர் சண்முகசுந்தர முதலியார் அவர்கள் புத்திரி உலகம்மாள் அன்னிய விவாகம் செய்ய வேண்டுமென்று எண்ணமிருந்தது. அதனால் அவர்கள் நான் இப்பொழுது இந்தக் கலியாணம் நடத்தினால் பின்னால் தாங்கள் எனக்கு மேற்சொன்ன பெண்ணையும் மணமுடித்து வைக்க வேண்டுமென்று ஒப்பந்தம் பேசினார்கள். தந்தையின் மாமனாரும் அப்பொழுதிருந்த நிலைமையைத் தேசித்து சரியென்று ஒப்புக் கொண்டார்கள். பின் இரு திருமணங்களும் இனிதே நடந்தேறியது. கலியாணம் நடந்த பின் திருமலையப்ப முதலியாரவர்களுக்கு சுரம் குணமாகிவிட்டது. விதியை யாரால் வெல்ல முடியும்.

மேற்படி கலியாணம் நடந்து சில நாள் சென்ற பின் எங்கள் தகப்பனார் தாயாரிடம் நீ உன் தகப்பனாரிடம் சொல்லி பெண்ணைப் பேசி எனக்கு கலியாணம் நடத்தி வைக்கும் கேட்டுவா என்று வண்டியில் ஆழ்வார்குறிச்சிக்கு அனுப்பினார்கள். அவர்களும் தகப்பனாரிடம் வந்து தன் பர்த்தா அவர்கள் கேட்டபடி செய்யச் சொன்னார்கள். அதற்கு அவர்கள் அன்று இருந்த நிலைமையில் அப்படிச் சம்மதித்தேன். இன்று நானே உனக்கு விரோதமா நடக்கமாட்டேன். உனக்கு அவ்விடம் சௌகரியமானால் இரு. இல்லையானால் நான் உன்னைக் காப்பாற்றுகிறேன் என்று சொல்லி விட்டார்கள். தாயார் ஊருக்கு திரும்பிப் போய் நடந்ததைச் சொன்னார்கள். அதன் பின் அந்த வண்டியிலேயே தகப்பனாரவர்கள் ஆழ்வார்குறிச்சிக்கு வந்து மாமனாரிடம் தாங்கள் வாக்குக் கொடுத்தபடி எனக்கு 2ந்தாரம் நடத்தி வைக்க வேண்டுமென்று கேட்டார்கள். வெகுநேரம் தர்க்கம் பேசி பாட்டனார் சம்மதிக்கவில்லை. மருமகனுக்காக விருந்துச் சமையல் தயாராயிருந்தது. தகப்பனாரவர்கள் சாப்பிடாமல் கோபித்துக்கொண்டு பாப்பான்குளம் போய் சிவசுப்பிரமணிய முதலியார் வீட்டில் சாப்பிட்டுவிட்டு

ஊருக்குப் போய்விட்டார்கள். அதன் பின் சிறிய தகப்பனாருக்கு ஸ்ரீவில்லிபுத்தூர் உலகம்மாள் அண்ணியை கலியாணம் நடந்தது அவர்கள் நன்றாய்த் தமிழ் படித்திருந்தார்கள். கலியாணம் நடக்கும்பொழுது எங்கள் தாயாருக்கு பதினேழு வயது அதன் பின் தான் அவர்கள் எழுதவும் படிக்கவும் தையல் வேலையும் கற்றுக்கொண்டு வீட்டுச் செலவு கணக்குகளை அவர்களே எழுதி வந்தார்கள். வீட்டுக் காரியங்களையும் மிகவும் செட்டாகவும் சீராகவும் நடத்தி வந்தார்கள். மனமில்லாமல் நடந்த மணத்தை தனது பொறுமையாலும், கணவன் குறிப்பறிந்து நடந்து பணிவிடை செய்த திறமையாலும் மறக்கும்படி செய்தார்கள். இப்படியாக பத்தொன்பது வருஷம் இல்லறம் நடத்தி 1899ம் வருடம் வெள்ளகாலில் வைத்து நான்பிறந்த ஏழாம் நாள் ஜன்னி கண்டு இவ்வுலகை விட்டு மறைந்தார்கள். அப்பொழுது முதல் மகள் உலகம்மாள் அண்ணி திருநெல்வேலி தெற்கரண்மனையில் அத்தை வீட்டிலிருந்து படித்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது என் தமக்கையாருக்கு வயது பன்னிரண்டு தாயார் இறந்த 3 மாதம் கழித்து ருதுசோபனம் திருநெல்வேலி அரண்மனையில் தான் நடந்தது. தாயார் இறக்கும் பொழுது தகப்பனார் சென்னையில் உத்தியோகத்திலிருந்தார்கள். சென்னைக்கு தந்தி அடித்து தகப்பனாரவர்கள் வருமுன் காலமாய்விட்டார்கள். மறுநாள் தான் தகப்பனாரவர்கள் வந்து நான் பார்த்துக் கொடுக்கவில்லையென்று வருத்தப்பட்டார்கள். தமக்கையாரவர்கள் தாயார் இறக்க ஒரு மணி நேரத்திற்கு முன் திருநெல்வேலியிருந்து வண்டி வைத்து வந்து சேர்ந்தார்கள். தமக்கையாரைப் பார்த்ததும் தாயார் நான் உன்னைப் பார்க்காமல் போகிறேன் என்று சொன்னார்களாம். சிறிய தகப்பனார் மனைவி இருவரிடமும் என் குழந்தைகளை நீங்கள் தான் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று சொன்னார்களாம்.

சிறிய தகப்பனார் ராமலிங்க முதலியாரவர்களுக்கு ராஜபாளையம் ஜவுடையம்மை அண்ணியைக் கலியாணம் நடந்திருந்தது. அவர்களுக்குக் குழந்தை இல்லை. அவர்கள் இருவரும் தான் தமயனார் குழந்தையை கண்ணும் கருத்துமாய் வளர்த்து வந்தார்கள். 3வயதாகும் வரை தகப்பனாரின் தாயார் உலகம்மாளண்ணியும் இருந்தார்கள். பின்னர் அவர்களும் காலஞ்சென்றுவிட்டார்கள். சிறிய தகப்பனார் ராமலிங்க முதலியாரவர்கள் இங்கிலீஷும் தமிழும் படித்திருந்தார்கள். எந்த உத்தியோகஸ்தர்களிடமும் சாதாரணமாகப் பேசிக் காரியம் முடித்துவிடுவார்கள். யாருக்கும் உபகாரம் செய்வார்கள்.

கொஞ்சம் இங்கிலீஷ் வைத்தியமும் தெரியும். இங்கிலீஷ் மருந்துகள் அவர்கள் வீட்டில் வாங்கி வைத்துக்கொண்டு சிறு காயங்கள், கட்டிகளுக்கு சத்திர சிகிச்சையும் செய்து ஜனங்களுக்கு உதவி செய்வார்கள். இவர்கள் திருநெல்வேலி தேவஸ்தானக் கமிட்டி மெம்பராகவும், தென்காசி பெஞ்ச் மாஜிஸ்டிரேட்டராகவும் இருந்து இறக்க 4 வருஷங்களுக்கு முன் உடல் நலமில்லாமல் விலகிக் கொண்டார்கள். இவர்கள் தமயனார் இவருடைய குழந்தைகளிடமும் மிகவும் அன்பாக இருப்பார்கள். சிறிய தந்தை திருமலையப்ப முதலியாரவர்கள் தமிழ் நன்றாய்ப் படித்திருந்தார்கள். விவசாயத்திலும் விருத்தி செய்வார்கள். அவர்களுக்கு முதல் மனைவியிடம் 5 ஆண்களும் ஒரு பெண்ணும் 2வது மனைவிக்கு 6 பெண்ணும் 1 பிள்ளையும் பிறந்தார்கள். அவர்கள் முதல் மனைவியார் உலகம்மாளண்ணி நன்றாகத் தமிழ் வாசித்தார்கள். மத்தியான வேளைகளில் எங்கள் பாட்டியாருக்கு ராமாயணம், பாரதம், பாகவதம், கந்தபுராணம் படித்துச் சொல்லுவார்கள். அவர்கள் மூத்தமகன் பழனியப்ப முதலியாரவர்கள் சப்ஜட்ஜாயிருந்து பென்ஷன் வாங்கினார்கள்.

சிறிய தகப்பனார் ராமலிங்க முதலியாரின் மனைவியின் தமக்கையார் முத்தம்மாளண்ணியை மேடை தளவாய் ரங்கநாத முதலியாரவர்களுக்கு முதல் தாரம் மணமுடித்திருந்தது. அவர்கள் ஒரே மகள் அலமேலு அண்ணியை அவர்கள் தமக்கையார் செல்லம்மாளண்ணியின் புத்திரர் சிதம்பரகுமாரசுவாமி முதலியாரவர்கட்கும், டி முத்தம்மாளண்ணியின் பெரிய தகப்பனார் மகள் தங்கத் தண்ணியை தனக்கு 2வது தாரமாகவும் புத்திரன் இல்லையென்று விவாகம் செய்தார்கள். விவாகம் நடந்த 14ம் மாதம் இரு மனைவியரையும் பெண்ணையும் விட்டு தனது இருபத்தெட்டாவது வயதில் காலஞ்சென்று விட்டார்கள். அவர்கள் மகள் அலமேலு அண்ணியும் ஒரு பெண் குழந்தையை பிரசவித்து ஐந்தாவது நாள் காலஞ் சென்றுவிட்டார்கள்.

அலமேலு அண்ணியின் ஸ்ரீமந்தமுகூர்த்தம் எனது தந்தையாரின் இரண்டாவது விவாகமும் திருநெல்வேலி தெற்கரண்மனையில் வைத்து ஒன்றாக நடந்தது. எனது தாயார் இறந்து சில மாதங்கள் கழிந்த பின் தந்தையார் தென்காசி தாலுகா கீழாரக்குளம் ராமசுவாமி முதலியாரவர்களின் புத்திரியும் திருநெல்வேலி பூசை மடம் தீத்தாரப்ப முதலியாரவர்களின் அபிமான புத்திரியுமான வடிவம்மாளண்ணியை இரண்டாவது மணம் செய்து கொண்டார்கள். அவர்களுக்கு வேலம்மாளண்ணி, செல்லம்மாளண்ணி

பழனியப்ப முதலியார், தீத்தாரப்ப முதலியார் என்ற நான்கு குழந்தைகள் பிறந்தார்கள். அவர்களின் வேலம்மாளண்ணி தனது 11வது வயதில் ஆழ்வார்குறிச்சியில் தமக்கை உலகம்மாளண்ணி வீட்டில் படித்துக் கொண்டிருக்கும் போது சன்னிக்கட்டு வந்து இறந்து போனார்.

தகப்பனார் இறக்கும் பொழுது மூன்று பெண்களும் இரண்டு பிள்ளைகளும் சிவந்தராய் இருந்தோம். அவர்கள் ஆவிபிரியும் பொழுது தமக்கையாரும் பெரிய தம்பியும் தான் உடனிருந்து உதவக் கிடைத்தது. தந்தையார் பாம்பே வெட்டரி காலேஜில் படித்து ஜி.பி.வி. பட்டம் பெற்றார்கள். 1911ம் ஆண்டு மே மாதம் வெட்டநெறிடிப்பார்ட்மெண்டில் டிப்டி சூப்பிரண்டாக நியமிக்கப்பெற்றார்கள். 15.8.1915ல் ஓய்வெடுத்துக் கொண்டார்கள். அப்பொழுது அவர்கள் சம்பளம் ரூ.300 ஓய்வெடுத்த பின்னும் முன்னும் அவர்கள் தமிழ் உலகுக்கு எழுதி உதவிய நூல்கள் பல. அவர்கள் எப்பொழுதும் ஆகார விஷயத்தில் வேளை தவறாமலும் திட்டித் அளவுக்கு மிஞ்சாமலும் மிகவும் சாக்கிரதையாகச் சாப்பிட்டு உடம்பை கவனித்துக் கொண்டு வந்தார்கள். கடைசியாக அவர்கள் மூன்று மாதம் கட்டி ஆகாரம் ஜீரணிக்காமல் பால், மோர் தேயிலை முதலிய தண்ணீர் ஆகாரங்கள் மட்டும் சாப்பிட்டுக் கொண்டு வழக்கம் போல் எழுதவும் படிக்கவும் மாக இருந்தார்கள். இறக்க பதினைந்து நாட்கள் முன் வரை தான் அவர்களால் படிக்கவும் எழுதவும் முடியாமல் படுக்கையில் உட்கார்ந்திருந்தார்கள் கடைசி வரை அவர்கள் வாழ்நாளில் ஒரு நிமிஷமும் வீண் போக்க மாட்டார்கள். கல்விக்கென்று யார் வந்து யாசகம் கேட்டாலும் தடையின்றி கொடுத்துவிடுவார்கள். அவர்களிடம் விருந்தோம்பும் குணமும் உற்றார்க்கும் ஊரார்க்கும் உதவும் குணமும் உண்டு. அவர்கள் உதவியால் படித்து முன்னுக்கு வந்தவர்களும் உத்தியோகம் பார்த்தவர்களும் பந்துக்களிலும் மற்றவர்களிலும் அநேகர் உண்டு. தொண்ணூறு வயதளவு வாழ்ந்திருந்து பிறர்க்கும் ஒரு வித கஷ்டமும் இல்லாமல் தனக்கும் அதிக கஷ்டமில்லாமல் அவர்கள் இறைவனடி சேர்ந்தார்கள். அவர்களை போல் நம்மில் கல்வியில் உழைப்பும் ஊக்கமும் உள்ளவர்களைக் காண்பரிது.

Contributed by V.P Chinnammal Anni